*206 Thiru M.Sundaradoss

Will the Hon. the Minister for Adi-Dravidar Welfare be please to state

Whether the Commissioner of Milk at Madhavaram in Madras has recieived complaints from the Advocates about adulteration of milk supplied through the automatic milk vending booth of Chitrakuam during August 1991 and the action taken there of

மாண்புமிகு திரு.எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புகார் கடிதத்தின்பேரில் திடீர் சோதனை செய்யப்பட்ட போது இந்நிலையத்தின் பாலின் அளவு, குறைத்து வழங்கப் பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இதற்காக நிலைய சலுகைதார-ருக்கு ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. நிலையத்தில் வழங்கப்பட்ட பாலைப் பரிசோதித்துப் பார்த்ததில் பாலின் தரம் திருப்திகரமாக இருந்தது

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவை தலைவர்அவர் களே, தானியங்கி என்கிற அந்த ஆட்டோமெட்டிக் மெஷின் இயங் காமல் அந்த பாலை வெளியே வைத்துஅந்த நபர் அளவு வைத் கொடுப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் அது உண்மையா? ஆமெனில் அந்த ஆட்டோமெட்டிக் மெஷினை ரிப்பேர் செய்து பழையமாதிரி பால் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அடிக்கடி பார்வையிடுகிறபோது இது போன்ற தவறுகள் இருக்கின்றே ஆட்டோமெட்டிக் வென்டில் மெஷின்ஸ் பெறுத்தவரையில் உடனடியாக ரிப்பேர் செய்து தர பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவை தலைவர்: வினா எண். 492 திரு.ச புரட்சிமணி, மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்

492—தொழுதூரில் கால்நடை மருத்துவமனை

*5640—திரு.ச. புரட்சிமணி

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மங்களூர் தொகுதி தொழுதூரில் ஒரு கால் நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

1992 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு.எம் ஆனந்தன்

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மங்களூர் தொகுதி தொழுதூரில் புதியதாக ஒரு கால்நடை மருந்தகம் துவக்க அரசு உத்தரவுகள் பிறப்பித்துள்ளது.

திரு.ச. புரட்சிமணி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தொகுதி சார்பாகவும் தொகுதிமக்கள் சார்பாகவும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றிகூறிக்கொள்வதோடு ஏதாவது ஒரு வினா கேட்கலாம்.

திரு.ச.புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அது எப்போது துவக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 31-3-1992 அன்று உத்தரவு பிறப்பித்து இருக்கிறார்கள். அது வரக்கூடிய ஆண்டில் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.என்.ஜி.வேணுகோபால் இது மங்களூர் தொகுதி பற்றி கேள்வி. அது பற்றிய கேள்வி கேட்பதாக இருந்தால் கேட்கலாம்.

திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 1981 ஆம் ஆண்டு முதல் என்னுடைய தொகுதியிலே வழங்கப்படாமல் இருந்த.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொழுதூரில் ஒரு கால்நடை மருத்துவமனைப்பற்றியது. அது சம்பந்தமாக ஏதாவது கேள்வியிருந்தால் கேளுங்கள்

திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே என்னுடைய சொந்தத் தொகுதியிலே அந்தக் கால்நடை மருத்துவமனை வழங்கப்படாமல் இருந்து இப்போது வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைச் சொல்வதற்கு தான் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : நான் ஏற்கனவே சொன்னேன். தொழுதூரில் ஆரம்பிப்பதற்காவது நன்றி சொல்லுங்கள்.. இந்தக்கேள்வி அதைப்பற்றியது. அதற்காக நன்றி சொல்வதாக இருந்தால் சரியாக இருக்கும். உட்காருங்கள்.

அடுத்த வினா எண். 493 திரு.வெ. தமிழரசு மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

493—

சேலம் மாவட்டத்தில் 'சேகோ" சர்வ் என்னும் கூட்டுறவு அமைப்பு நிறுவனத்தை செம்மைப்படுத்தல்

*4926— திரு.வெ. தமிழரசு,
மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மவட்டத்தில் சேகோ சர்வ் என்னும் கூட்டுறவு அமைப்பு நிறுவனம் இயங்குவது நிதிநெருக்கடி காரணமாக ஸ்தம்பிக்கும் நிலை ஏற்ப்பட்டுள்தால் பல இலட்சக்கணக்கான-விவசாயிகளுக்கும் குச்சிக்கிழங்கிற்கும் போதிய விலை கிடைக்காத நிலையும் 900—க்கும் மேற்பட்ட ஜவ்வரிசி ஆலைத்தொழில்கள் நலிவடைந்துள்ள நிலை ஏற்பட்டுள்ளதையும் அரசு அறியுமா?

(ஆ) இதை நம்பியுள்ள பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களைக் காக்க சேகோ சர்வை நன்கு செயல்ப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

(அ) சேகோ சர்வ் நிறுவனத்தில் நிதி நெருக்கடி இல்லை என்பதால் சேகோ தொழிலகங்களை மூடவேண்டிய அவசியம் இல்லை. மேலும் குச்சிக் கிழங்கு உற்பத்தியாளர்களுக்கு குச்சிக் கிழங்கிற்கு தகுந்த விலை பெறுகிறார்கள்.

(ஆ) அரசு இதனை நம்பி வாழும் சேகோ தொழிலாளர்களின் நலனைக் காப்பாற்றி வருகிறது. ஏற்கனவே விற்பனைவரி மானியமும் அரசால் இச்சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது விலை ஏற்றத்தாழ்வு மிக அதிகமாக இருப்பதால் சேகோ, கார்ப்பரேஷன்—ஆவது அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தற்போதுள்ள நிலைமைக்கு ஏற்றம்படி அரசு 1991-92 ஆம் ஆண்டிற்கு ரூ,50 இலட்சம் மானியம் வழங்கியுள்ளது.